# மன்றாட்டுக்கள்

புனிதர்களின் பெருந்திரள் நம்மை சூழ்ந்திருக்க விண்ணகப் பயணத்தை மேற்கொண்டுள்ள நாம் தொடர்ந்து முன்னேறத் தூண்டுதல் பெறுகிறோம். என்றும் நமது நம்பிக்கைக்கு காரணரும் அதை நிறைவு செய்பவருமாகிய கிறிஸ்துவிடம் வேண்டுவோம்.

**எல்: ஆண்டவரே, உம் புனிதர்கள் அனைவரோடும் சேர்ந்து நாங்கள் உம்மைப் புகழ்ந்து, உமக்கு நன்றி கூறுகின்றோம்.**

ஆண்டவரே, திருத்தூதர்களை உமது திருச்சபையின் அடித்தளமாக நிலைபெறச் செய்தருளினீர்: அவர்களுடைய பொறுப்பில் நீர் ஒப்படைத்த அனைத்திற்கும் நாங்கள் உண்மையுள்ளவர்களாக இருக்கச் செய்தருளும்.

தமது இரத்தத்தையும் சிந்தி மறைசாட்சியர்கள் உமக்குச் சான்று பகர்ந்தனர்: கிறிஸ்துவர்கள் அனைவரும் உமது வார்த்தைக்கு உண்மையுள்ள சாட்சிகளாய் இருக்கச் செய்தருளும்.

ஆண்டவரே, கன்னிமையில் தங்கள் வாழ்க்கையை உமக்கு அர்ப்பணித்தவர்களோடு நீர் இருந்தருளும்: உலக இறுதியில் அவர்கள் எதிர்ப்பார்த்திருக்கும் மாட்சி நிறை வாழ்வுக்கு, அவர்களது நம்பிக்கையும் பெருந்தன்மையும் அடையாளமாக இருப்பதாக.

நீர் என்றும் எம்முடன் இருக்கிறீர் என்பதையும் எம்மீது அக்கறை கொண்டுள்ளீர் என்பதையும் புனிதர்கள் வழியாக வெளிப்படுத்துகிறீர்: நாங்கள் அவர்களுக்கு வணக்கம் செலுத்தும்போதெல்லாம் உம்பால் மேன்மேலும் ஈர்க்கப் பெறுவோமாக.

இறந்த எம் சகோதர சகோதரிகள் அனைவரையும் தூய கன்னி மரியா, புனித யோசேப்பு, மற்றும் அனைத்து புனிதர்களின் கூட்டத்தில் சேர்த்தருளும்: அவர்களுடைய மன்றாட்டினால் எங்களுக்கும் உமது ஆட்சியில் இடமளித்தருளும்.



## ஆண்டவரின் செபம்

பரலோகத்தில் இருக்கிற
எங்கள் பிதாவே,
உம்முடைய நாமம்
அர்ச்சிக்கப்படுவதாக.
உம்முடைய இராச்சியம் வருக,
உம்முடைய சித்தம் பரலோகத்தில்
செய்யப்படுவது போல
பூலோகத்திலும் செய்யப்படுவதாக.
எங்கள் அனுதின உணவை
இன்று எங்களுக்குத் தாரும்:
எங்களுக்குத் தீமை
செய்தவர்களை
நாங்கள் பொறுப்பது போல
எங்கள் பாவங்களைப்
பொறுத்தருளும்.
எங்களைச் சோதனையில்
விழவிடாதேயும்
தீமையிலிருந்து எங்களை
இரட்சித்தருளும்.

# இறுதி செபம்

என்றும் வாழும் எல்லாம் வல்ல கடவுளே! எல்லா புனிதர்களிலும் நீர் கொண்டிருந்த உம் அருளின் வெற்றியினை மகிழ்வோடு நாங்கள் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். எங்களுக்காகப் பரிந்து பேசும் புனிதர்களின் பெரும் எண்ணிக்கையை முன்னிட்டு, நாங்கள் எப்போதும் ஆவலோடு கெஞ்சிக் கேட்கும் உமது இரக்கப்பெருக்கை உம்மிடமிருந்து பெற்றுக்கொள்வோமாக. உம்மோடு பரிசுத்த ஆவியின் ஐக்கியத்தில் ஒரே இறைவனாய் என்றென்றும் வாழ்ந்து, ஆட்சி செய்கின்ற எங்கள் ஆண்டவரும் உம் திருமகனுமாகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

ஆண்டவர் நம்மை ஆசீர்வதித்து, தீமைகள் அனைத்தினின்றும் பாதுகாத்து, நம்மை நிலைவாழ்வுக்கு அழைத்துச் செல்வாராக. ஆமென்.

INTERNAL CIRCULATION ONLY

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

*Print:* Stenoprint Sdn Bhd
*Design:* The Mustard Seed Studio

நவம்பர் 2018

# திருவழிபாட்டின் திருமணிகள்

## புனிதர்கள்
**சங்கீதமாலை**

முதல்: இறைவா, எமக்குத் துணைபுரிய வாரும்
எல்: ஆண்டவரே, எமக்குத் துணைபுரிய விரைந்து வாரும்
முதல்: பிதாவுக்கும் சுதனுக்கும்...



## பாடல்:
# உன் புகழைப் பாடுவது

உன் புகழைப் பாடுவது
என் வாழ்வின் இன்பமையா
உன் அருளைப் போற்றுவது
என் வாழ்வின் செல்வமையா 2

1. துன்பத்திலும் இன்பத்திலும் நல்
தந்தையாய் நீயிருப்பாய்
கண்ணயரக் காத்திருக்கும் நல்
அன்னையாய் அருகிருப்பாய் 2
அன்பு எனும் அமுதத்தினை நான்
அரிந்திட எனக்களிப்பாய்
உன் நின்று பிரியாமல் நீ
என்றும் அணைத்திருப்பாய்
நீ என்றும் அணைத்திருப்பாய்

2. பல்லுயிரைப் படைத்திருப்பாய் நீ
என்னை ஏன் படைத்தாய்
பாவத்திலே வாழ்ந்திருந்தும் நீ
என்னை ஏன் அழைத்தாய் 2
அன்பினுக்கு அடைக்கும்தாள் ஒன்று
இல்லை என்றுணர்ந்தேன்
உன் அன்பை மறவாமல் நான்
என்றும் வாழ்ந்திடுவேன்
நான் என்றும் வாழ்ந்திடுவேன்

**முன்மொழி** 1: நான் எல்லா நாட்டினின்றும், அரியணைமுன் நின்று கொண்டிருந்த, யாராலும் எண்ணிக்கையிட முடியாத பெருந்திரளான மக்களைக் கண்டேன்.

## திருப்பாடல்கள் 110 3:1–5, 7

ஆண்டவர் என் தலைவரிடம்,
‘நான் உம் பகைவரை உமக்கு
கால்மணையாக்கும்வரை
நீர் என் வலப்பக்கம் வீற்றிரும்’ என்று உரைத்தார்.

வலிமைமிகு உமது செங்கோலை
ஆண்டவர் சீயோனிலிருந்து ஓங்கச் செய்வார்;
உம் எதிரிகளிடையே ஆட்சி செலுத்தும்!

நீர் உமது படைக்குத் தலைமை தாங்கும் நாளில்
தூய கோலத்துடன் உம் மக்கள் தம்மை
உமக்கு உவந்தளிப்பர்;
வைகறை கருவுயிர்த்த பனிபோல
உம் இளம் வீரர் உம்மை வந்தடைவர்.

‘மெல்கிசெதேக்கின் முறைப்படி நீர் என்றென்றும் குருவே’
என்று ஆண்டவர் ஆணையிட்டுச் சொன்னார்;
அவர் தம் மனத்தை மாற்றிக் கொள்ளார்.

என் தலைவர் உம் வலப்பக்கத்தில் உள்ளார்;
தம் சினத்தின் நாளில்
அவர் மன்னர்களை நொறுக்குவார்.

வழியில் உள்ள நீரோடையிலிருந்து அவர் பருகுவார்;
ஆகவே அவர் தலைநிமிர்ந்து நிற்பார்.

தந்தைக்கும் மகனுக்கும் தூய ஆவியாருக்கும்
மாட்சி உண்டாவதாக. தொடக்கத்திலே
இருந்ததுபோல இப்பொழுதும் எப்பொழுதும்
என்றென்றும் இருப்பதாக.

## பிதாவுக்கும்...

**முன்மொழி** 1: நான் எல்லா நாட்டினின்றும், அரியணைமுன் நின்று கொண்டிருந்த, யாராலும் எண்ணிக்கையிட முடியாத பெருந்திரளான மக்களைக் கண்டேன்.

**முன்மொழி** 2: இறைவன் அவர்களைச் சோதித்துப் பார்த்துத் தமக்குத் தகுதியுள்ளவர்கள் எனக் கண்டார்; ஆண்டவரிடமிருந்து வந்த அரச மாட்சி அவர்களுக்கு உரியதாகும்.

## திருப்பாடல்கள் 116:10–19

‘மிகவும் துன்புறுகிறேன்!’ என்று சொன்னபோதும்கூட
நான் நம்பிக்கையோடிருந்தேன்.
‘எந்த மனிதரும் நம்பத்தக்கவரல்லர்’ என்று
என் கலக்கத்தில் நான் சொன்னேன்.

ஆண்டவர் எனக்கு செய்த எல்லா
நன்மைகளுக்காகவும் அவருக்கு நான் என்ன
கைம்மாறு செய்வேன்?
மீட்பின் கிண்ணத்தைக் கையில் எடுத்து
ஆண்டவரது பெயரை நான் கூவியழைப்பேன்.

ஆண்டவருடைய மக்கள் அனைவரின்
முன்னிலையில் அவருக்கு என் பொருத்தனைகளைச்
செலுத்துவேன். ஆண்டவர்தம் அன்பர்களின் சாவு
அவரது பார்வையில் மிக மதிப்புக்குரியது.

ஆண்டவரே! நான் உண்மையாகவே உம் ஊழியன்;
உம் பணியாள்; உம் அடியாளின் மகன்;
என் கட்டுகளை நீர் அவிழ்த்துவிட்டீர்.
நான் உமக்கு நன்றிப்பலி செலுத்துவேன்;
ஆண்டவராகிய உம் பெயரைக் கூவியழைப்பேன்.

ஆண்டவரே! உம் மக்கள் அனைவர்
முன்னிலையிலும் உமக்கு என் பொருத்தனைகளை
நான் செலுத்திடுவேன்; உமது இல்லத்தின்
முற்றங்களில், எருசலேமின் நடுவில், ஆண்டவரே!
உமக்கு என் பொருத்தனைகளை நான்
செலுத்திடுவேன்.

## பிதாவுக்கும்...

**முன்மொழி 2: இறைவன் அவர்களைச் சோதித்துப் பார்த்துத் தமக்குத் தகுதியுள்ளவர்கள் எனக் கண்டார்; ஆண்டவரிடமிருந்து வந்த அரச மாட்சி அவர்களுக்கு உரியதாகும்.**

**முன்மொழி 3:** ஆண்டவராகிய கடவுளே, உமது இரத்தத்தால் எல்லாக் குலத்தையும் மொழியையும் இனத்தையும் நாட்டையும் சார்ந்த மக்களாகிய எங்களை நீர் மீட்டுக்கொண்டீர்; எங்கள் கடவுளுக்காக ஆட்சியுரிமை பெற்றவர்களாகவும் எங்களை ஏற்படுத்தினீர்.

## சிறுபாடல் திருவெளிப்பாடு 4:11, 5:9,10,12

எங்கள் ஆண்டவரே, எங்கள் கடவுளே,
மாட்சியும் மாண்பும் வல்லமையும் பெற
நீர் தகுதி பெற்றவர்; ஏனெனில் அனைத்தையும் படைத்தவர்
நீரே. உமது திருவுளப்படியே அவை உண்டாயின,
படைக்கப்பட்டன.

“ஏட்டை எடுக்கவும் அதன் முத்திரைகளை
உடைத்துப் பிரிக்கவும் தகுதி பெற்றவர் நீரே.
நீர் கொல்லப்பட்டீர்;
உமது இரத்தத்தால் குலம், மொழி, நாடு, மக்களினம்
ஆகிய அனைத்தினின்றும் மக்களைக் கடவுளுக்கென்று
விலை கொடுத்து மீட்டுக் கொண்டீர்.

ஆட்சியுரிமை பெற்றவர்களாகவும் குருக்களாகவும்
அவர்களை எங்கள் கடவுளுக்காக ஏற்படுத்தினீர்.
அவர்கள் மண்ணுலகின்மீது ஆட்சி செலுத்துவார்கள்.”

“கொல்லப்பட்ட ஆட்டுக்குட்டி வல்லமையும் செல்வமும்
ஞானமும் ஆற்றலும், மாண்பும் பெருமையும்
புகழ்ச்சியும் பெறத் தகுதி பெற்றது.”

தந்தைக்கும் மகனுக்கும் தூய ஆவியாருக்கும் மாட்சி உண்டாவதாக.
தொடக்கத்திலே இருந்ததுபோல இப்பொழுதும் எப்பொழுதும்
என்றென்றும் இருப்பதாக.

## பிதாவுக்கும்...

**முன்மொழி : ஆண்டவராகிய கடவுளே, உமது இரத்தத்தால் எல்லாக் குலத்தையும் மொழியையும் இனத்தையும் நாட்டையும் சார்ந்த மக்களாகிய எங்களை நீர் மீட்டுக்கொண்டீர்; எங்கள் கடவுளுக்காக ஆட்சியுரிமை பெற்றவர்களாகவும் எங்களை ஏற்படுத்தினீர்.**

## அருள்வாக்கு 2 கொரிந்தியர் 6:16, 7:1

வாழும் கடவுளின் கோவில் நாமே. “நான் உறைவிடத்தை அவர்கள் நடுவில் நிறுவுவேன். அவர்கள் நடுவே நான் உலவுவேன். நானே அவர்கள் கடவுள்! அவர்கள் என் மக்கள்!” என்று கடவுள் சொல்லியிருக்கிறார் அன்றோ! அன்பார்ந்தவர்களே, இத்தகைய வாக்குறுதியைப் பெற்றுள்ள நாம் உடலிலும் உள்ளத்திலும் மாசு எதுவுமின்றி நம்மையே தூய்மைப்படுத்துவோம். கடவுளுக்கு அஞ்சித் தூய வாழ்வில் நிறைவடைவோம்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## சிறு மறுமொழி

முதல்: அன்பர்கள், ஆண்டவரில் அக்களிப்பார்களாக. அல்லேலூயா. அல்லேலூயா.
எல்: அன்பர்கள், ஆண்டவரில் அக்களிப்பார்களாக. அல்லேலூயா. அல்லேலூயா.
முதல்: இறைவன் தமக்கென உங்களைத் தேர்ந்துக்கொண்டார்.
எல்: அன்பர்கள், ஆண்டவரில் அக்களிப்பார்களாக. அல்லேலூயா. அல்லேலூயா.
முதல்: தந்தைக்கும் மகனுக்கும் தூய ஆவியாருக்கும் மாட்சி உண்டாவதாக.
எல்: அன்பர்கள், ஆண்டவரில் அக்களிப்பார்களாக. அல்லேலூயா. அல்லேலூயா.

## கன்னிமரியின் பாடல்



**முன்மொழி:** எத்துணை மாண்புள்ள ஆட்சி இது! இதில் அன்பர்கள் அனைவரும் கிறிஸ்துவோடு அகமகிழ்ந்திருக்கின்றனர்; கடவுளின் ஆட்டுக்குட்டி செல்லுமிடமெல்லாம் வெண்ணாடை அணிந்த மக்கள் கூட்டம் அவரைப் பின் தொடர்கிறது.

என் ஆன்மா ஆண்டவரில் களிகூருகின்றது
என் ஆன்மா ஆண்டவரை ஏத்திப் போற்றுகின்றது.
என் மீட்பராம் கடவுளை நினைத்து என் இதயம்
களிகூருகின்றது.
ஏனெனில், தாழ்நிலை நின்ற தம் அடிமையைக்
கடைக்கண் நோக்கினார்.

இதோ! இந்நாள் முதல் எல்லாத் தலைமுறைகளும்,
என்னைப் பேறுடையாள் எனப் போற்றுமே.
ஏனெனில், வல்லமை மிக்கவர் எனக்கு அரும்பெரும்
செயல் பல புரிந்தார். அவர்தம் பெயர் புனிதமாமே.
அவர்தம் இரக்கம் அவரை அஞ்சுவோர்க்குத்
தலைமுறை தலைமுறையாய் உளதாமே.

அவர் தமது கைவன்மையைக் காட்டினார். நெஞ்சிலே
செருக்குற்றவர்களைச் சிதறடித்தார்.
வலியோரை அரியணையினின்று அகற்றினார்,
தாழ்ந்தோரை உயர்த்தினார். பசித்தோரை நலன்களால்
நிரப்பினார், செல்வரை வெறுங்கையராய் அனுப்பினார்.

நம் முன்னோருக்கு அவர் சொன்னது போலவே,
ஆபிரகாமுக்கும் அவர்தம் வழிவந்தோர்க்கும்
என்றென்றும் இரக்கம் காட்ட நினைவுகூர்ந்து தம்
அடியானாகிய இஸ்ராயேலை ஆதரித்தார்.

## பிதாவுக்கும்...

**முன்மொழி:** எத்துணை மாண்புள்ள ஆட்சி இது! இதில் அன்பர்கள் அனைவரும் கிறிஸ்துவோடு அகமகிழ்ந்திருக்கின்றனர்; கடவுளின் ஆட்டுக்குட்டி செல்லுமிடமெல்லாம் வெண்ணாடை அணிந்த மக்கள் கூட்டம் அவரைப் பின் தொடர்கிறது.